பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்
யாழ்ப்பாணம்
இடைக்கப்பெற்றது
2 DEC 1996

பொது சன நூலகம்
3 DEC 1996
பக்கங்கள் 6
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 157 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 22,29 - 11 - 1996 இதழ்: 14.15

செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
ஆசிரியர்
உதயதாரகை
ஆதீனக் காரியாலயம்.
வட்டுக்கோட்டை.

## அழுது, கண்ணீர் விடும் இன்றைய சூழலின் மாந்தருக்கு ஏற்ற இறையியல் வேண்டும்!

"நமது அனுபவத்திற்கு வேதம் கொடுக்கும் மறுமொழியே எமது இறையியலாக உருவெடுக்க வேண்டும். எமது அனுபவத்துக்கு புறம்பான இறையியல் எமக்கு தேவையில்லை. அன்பு மிகுந்த ஆதரவு தருகிற, எம்மோடு சேர்ந்து துயரம் அனுபவிக்கிற இறைவனே எமது இறைவன் எனும் சிந்தனையை எமக்குள் ஊற்றெடுக்க வேண்டும்" இவ்வாறு யாழ். கல்லூரி முதல்வர் திரு. ஜி. இராஜநாயகம் அருளுரையாற்றினார்.

சென்ற 17 - 11 - 96 அன்று மாலை 4-30 மணிக்கு வட்டுக்கோட்டை திருச்சபையில் நடைபெற்ற மாலை வழிபாட்டில் அருளுரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தமது அருளுரையில்:-

"இன்று பல்வேறு இறையியல்கள் பிறப்பெடுத்துள்ளன. "வேற்றுக் கிரகங்கள் இறைவனுக்கு கீழே அடங்கவில்லையா? பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றதா?" என பல்வேறு விடயங்கள் இறையியலில் ஆராயப்படுகின்றன. ஆனால் எமது சமுதாயத்தைப் பொறுத்தளவில் இவை அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. தமிழ்மக்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு "ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை வேதனையுடன் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கான விடைகளை வேதத்திலிருந்து எடுத்து அந்தகைபோருடன் நாம் பகர முற்பட வேண்டும். உரிமை இழந்து, வீடு இழந்து, இடம் பெயர்ந்தவர்களாக மாறும் மக்களுக்கு வேதம் கொடுக்கும் பதில் என்ன என்பதை நாம் மக்களுக்கு புரிய வைக்கவேண்டும்.

மரணச் சடங்குக்குப் போகும் ஒருவர் இடுக்கமான, விசாலமான வழி பற்றி பிரசங்கிக்க முடியாது. மாறாக இறைவன் அன்புள்ளவராக, ஆதரவு தருபவராக அவர்களுடன் சேர்ந்து பாடனுபவிக்கிறார் என்பதை அவர்கள் உள்ளத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 157 வருடங்களுக்கு முன் உதயதாரகை

கிறிஸ்தவ இல்லங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கும் ஓர் பெரும் விருந்தாளியான இப்பத்திரிகை, வித்துவத்தன்மையும், பயபக்தியும், உயர்பதவியும், தெளிந்த ஞானமும், உள்ள பத்திராதிபர்களை தன்னகத்தே கொண்டு விளங்கியது.

குறிப்பாக இலங்கையிலேயே மிகவும் நுட்பமான அறிவுடையவர் எனப் போற்றப்பட்ட, கணிதப் பேராசிரியர் Allen Abraham ஐயும் பத்திராதிபராய் கொண்டு விளங்கியது.

இவர்கள் நேர்மையான பார்வை கொண்டவர்களாயும், நடுநிலைமையுடையவர்களாயும், பொது மக்களுடைய வாழ்க்கையில் காணப்படும் பிழைகளை எவ்வித பயமுமின்றி எடுத்துக் கூறுபவர்களாயும், காணப்பட்டார்கள்.

இப் பத்திராதிபர்களின் பேனாக்கள். நீதி 13:24 "பிரம்பைக் கையாட்டாதவன் தன் மகனைப் பகைக்கிறான்" எனும் வேதவசனத்திற்கு இணங்க, தவறியவர்களுக்கு சவுக்கால் அடிப்பது போன்று அடித்தது. பட்சபாதமின்றி பிழைகளை பிழை என எடுத்துக்காட்டி எழுதியதைக் காணக் கூடியதாய் உள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றாலயங்கள் மீள செயற்பாடு

அளவெட்டி கிராமத்திலே, ஆலயத்தில் இருந்து ஒரு மைல் சுற்றாடலிலே நாக்கணாவத்தை, கேல்வத்தை (கலைநகர்) ஆகிய இரண்டு சிற்றாலயங்கள் உள்ளன. இச் சிற்றாலங்களிலே அந்த கிராமத்திலே இருக்கும் பிள்ளைகளுக்கு திருமறை வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. இடம் பெயர்ந்து மீள மக்கள் வலிகாமத்தில் குடியமர்ந்த பின்னர் மீளவும் திருமறை வகுப்புக்களும், ஆங்கில வகுப்புக்களும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அளவெட்டித் திருச்சபையின் வாலிபர் பெண்களினால் நடத்தப்படும் இவ் வகுப்புக்களிலே நாக்கணாவத்தையில் 60 பிள்ளைகளும் கலைநகரில் 40 பிள்ளைகளும் பயனடைந்து வருவதோடு இவற்றுக்கு ஊடாக கிறிஸ்துவை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

## நத்தார் இன்னிசை ஆராதனை

யாழ்ப்பாணக் கல்லூரியினரின் நத்தார் இன்னிசை ஆராதனை ஞாயிற்றுக்கிழமை 24 - 11 - 96 மாலை 3-30 மணிக்கு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெற்றது.

## உடுவில் வை. எம். சி. எ. புதிய நிர்வாகிகள்

உடுவில் வை. எம். சி எ. புதிய இயக்குனர் சபைக்கு புதிய நிர்வாகிகள் அண்மையில் தெரிவானார். கள் தலைவராக திரு. V. மித்திரஞ்ஜனும் உப-தலைவராக திரு. M. ஸ்டீபனும் இயக்குனர்களாக திருவாளர்கள் B. மகேந்திரகுமாரும். பாஸ்டர் J. D. இரட்ணமும் தெரிவானார்கள்

## தையல் பயிற்சி

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலகத்தில் மேல் மாடியில் படித்து வேலைவாய்ப்பின்றி இருக் இருக்கும் பெண்பிள்ளைகளுக்கான தையல் பயிற்சி கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு வருட காலத்திற்கு நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கு பத்து பெண்பிள்ளைகள் முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## உடுவில் ஊழியன் வருகை

உடுவில் ஊழியன் வண. V. இராஜ்குமார் அவர்கள் சென்ற வாரம் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்து, தமது ஊழியத்தை நடாத்தி வருகிறார்.

## அரச உதவிபெறும் தனியார் பாடசாலை ஆசிரியர்கள் ஒன்றியம்

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் பாடசாலை ஆசிரியர்களது சம்பளம் "இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய" சம்பளத்திட்டத்துக்கு ஒத்ததாக அமையாததினால், இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய சம்பளத்திட்டத்தை தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு முழுமையாக நடைமுறைப்படுத்த அரசைக் கோரும் நோக்காக இவ் ஒன்றியம் 15-11-1996 வெள்ளி பி. ப. 2 30 மணிக்கு யாழ். பரி. யோவான் கல்லூரியில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டுள்ளது. ஒன்றியத்தில் தனியார் பாடசாலை ஆசிரியர்கள் அங்கத்தவர்களாக இணையலாம். இவ் ஒன்றியம் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஏற்படும் பலவகையான பிரச்சினைகளையும் இனங் கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கும் ஆசிரியர் நலனோம்பவும் உதவியாக அமையும்.

இதன் தலைவராக கே. யுகபாலசிங்கமும் செயலாளராக ஆர். திலகரத்தினமும், பொருளாளராக செல்வி ரதி இராசையாவும் உப தலைவராக பி. சந்திரசேகரமும் உப-செயலாளராக எஸ். நரேந்திரநாதனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## இறையியல் கல்லூரி நூல்கள் வருகை

தற்போது இராணுவமுகாமாக உள்ள மருதனார் மடத்தில் அமைந்துள்ள இறையியல் கல்லூரி கட்டடத்தில் இருந்த நூலக நூல்கள் யாவும், வட்டுக்கோட்டைக்கு கொண்டு வரப்பட்டன. இதற்கென நியமிக்கப்பட்ட அருள்திரு. பி ஜே. சூரியகுமார். அருள்திரு எஸ். மில்ரன் என்பவர்களும், இறையியல் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்களான சகோ. எஸ். குகனேஸ்வரன், சகோ. பி. தேவதாஸ் என்பவர்களும், சென்ற 16-11-96 அன்று மருதனார்மட

(6ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர்களுக்கு

உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள். அத்தோடு உங்களுக்கு அறிமுகமான புதிய சந்தாதாரரையும் அறிமுகப்படுத்துங்கள்.

வருட சந்தா ரூபா 250/-

வெளிநாடு £ 10 / $15

ஆயுள் சந்தா ரூபா 1000/-
(இலங்கை)

நினைவு அஞ்சலி, வாழ்த்துக்கள் குறைந்தது ரூபா 300/-
(1 Column X 6 C. M)

(ஆ-ர்)

# ஈழத்தமிழர் இறைமை

தந்தை செல்வாவைப் போன்றே அமரர் திருச்செல்வமும் மலேயாவில் பிறந்தவர். குழந்தைப் பராயத்தில் இருந்தே தந்தை செல்வா திருச்செல்வம் அவர்களை நன்கு அறிந்திருந்தார். 1919 இல் தமது தந்தையாரைப் பார்க்க தந்தை செல்வா மலாயா நாடு சென்றிருந்தார். தந்தை செல்வாவின் தந்தையார் வேலுப்பிள்ளையும், அமரர் திருச்செல்வத்தின் தந்தையார் முருகேசுவும் மலேயாவில் நண்பர்களாக விருந்தனர்.

தந்தை செல்வா திருச்செல்வம் அவர்களின் தந்தையாரைப் பார்க்கச் சென்ற பொழுது அவரது ஆண் மக்கள் இருவரது கல்வியின் எதிர்காலம் குறித்து இருவரும் கலந்துரையாடினர். தொடர்ந்து கல்வி கற்பதற்காக அமரர் திருச்செல்வமும், அவர் தம்பி இராஜேந்திராவும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். இங்குள்ள நல்ல பாடசாலைகளுள் ஒன்றான புனித தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்றனர். தந்தை செல்வா இருவரதும் பராமரிப்பாளராகினார்.

அமரர் திருச்செல்வம் சட்டக் கல்லூரியில் பயின்று வழக்குரைஞர் ஆனார். நீதித்துறையில் கடமை புரிந்த பின், சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமை புரிந்து படிப்படியாக உயர்வுபெற்று சொலிசிட்டர் ஜெனராகி பின் அரசசேவையில் இருந்து ஓய்வுபெற்று சாதாரண வழக்குரைஞரானார். அக்கால கட்டத்தில் பல முக்கிய அரசியல் வழக்குகளில் தோன்றி வாதாடி வெற்றியீட்டியுள்ளார். அவற்றுள் இரு வழக்குகள் தாம் கோடீஸ்வரன்மொழி வழக்கும், 'இராஜத்துரோகம்' செய்ததாக் குற்றஞ்சாட்டி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் நால்வர் மீது ட்ரயல் அற்பார் முறையில் ஜுரர்கள் இல்லாது மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் முன் தொடரப்பட்ட வழக்குமாகும்.

## அமரர் மு. திருச்செல்வத்தின் 20 ஆவது சிராத்த தினம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கணித ஆசிரியராக விளங்கியவரும், தமிழ் வளர்த்த பெரியார் சி. வை. தாமோதரம்பிள்ளையின் இளைய சகோதரருமாகிய அப்புக்குட்டி கிங்ஸ்பரியின் பெண்வழிப் பூட்டியராகிய புனிதம் கனகத்தைக் காதல் திருமணம் செய்து கொண்டார் திருச்செல்வம், வண. பிதா பிரான்சிஸ் கிங்ஸ்பரி அதன் ஸ்தாபகத் தலைவராக விளங்கிய காலத்தில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மலர்ந்ததே இவ்விருவரதும் காதல் திருமணம் புனிதம் திருச்செல்வம் ஓர் சிறந்த சமூக சேவகி. சிறப்பாக விழிப்புலன் செவிப்புலன் இழந்தோர் வாழ்வு நலம்பெற தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஒருவர் ஆவர்.

கலாயோகி ஆனந்தா கென்ற் குமாரசுவாமியின் சிஷ்யனாக பல நூல்களைத் தமது சொந்தச் செலவில் வெளியிட்டு வந்தவரான மலேயாவைச் சேர்ந்த எஸ் துரைராஜசிங்கம் "ஒரு நூற்றாண்டு காலம் மலேயா, சிங்கப்பூர் நாடுகளது மேம்பாட்டுக்கு உழைத்த ஈழத் தமிழர்கள்" எனும் தலைப்பில் சம்பந்தப்பட்ட பெரியார்களது வாழ்க்கைக் குறிப்புகளை அவர்களது ஒளிப் படங்கள் சகிதம் ஆங்கிலத்தில் ஒரு நூலாக வெளியிட்டிருந்தார். அந் நூலில் மலேசியா, சிங்கப்பூர் ஈழத் தமிழருக்கு அளித்த அருங்கொடைகள் என வர்ணித்து அவர்களுடைய ஒளிப் படங்களுடன் கூடியதாக தந்தை செல்வா, அமரர் மு. திருச்செல்வம் இருவரது வாழ்க்கைக் குறிப்புக்களையும் வெளியிட்டிருந்தார்.

தமிழர் மரபு வழித் தாயகத்தை ஏற்று அங்கீகரித்து அங்கு மாவட்ட சபைகளை நிறுவுவதாக தந்தை செல்வாவுடன் தாம் செய்து கொண்ட உடன்படிக்கை மீது பிரதமராக வரமுடிந்த டட்லி சேனநாயக்காவின் அரசியல், தமிழ்மொழி உபயோகத்துக்கான விசேட ஏற்பாடுகள் சட்டத்தின்கீழ் தமிழ் பிரமாணங்கள் மற்றும் மாவட்ட சபைகள் மசோதாக்களுக்கான வரவுகளைத் துரிதப்படுத்தும் பொருட்டாக தமிழரசுக்கட்சியின் பிரதிநிதியாக திருச்செல்வம் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 1965 – 1968 காலப் பகுதியில் வெளியிடப்பட்டிருந்த இந் நூலின் பிரதி யாழ் பொது நூலகத்துக்கும் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

சட்டசபை நிர்வாகத்தில் சட்டத்துறைச் செயலாளராகவும் பின்னர் சுதந்திர இலங்கையின் பிரதம நீதியரசராகவும் விளங்கிய சேர். அலன் ரோசின் கூட்டாளியாகவும், உடனுழைப்பாளராகவும் திகழ்ந்தவர் அமரர் திருச்செல்வம் 1947ம் வருடத்தில் இலங்கை யாப்பின் பிரதான சட்டவரைஞர்களாக இருந்திருந்தோர் இவ்விருவருமே சம்பந்தப்பட்ட யாப்பினைவரையும்போது, இந்தப் போக்கிரிகளை நம்பவியலாது. ஒவ்வொரு விடயத்தையும் நன்கு துலக்கமான தெளிவான சட்ட வாசகங்களாக நாம் குறிப்பிடுதலே சிறந்தது. என சேர் அலன் ரோஸ் தம்மிடம் தெரிவித்து இருந்தமையைப் பின்னர் திருச்செல்வம் நினைவுகூர வேண்டிய நிகழ்வுகளை எதிர்கொண்டார். அத்தகைய ஒரு நிகழ்வே கோடீஸ்வரன் மொழி வழக்கில் மாவட்ட நீதிபதி கிறெஸ்ரர் முன் தோன்றி தமது தயாரிப்பில் உருவாகிய சட்டவரைவான யாப்பின் 29ம் உறுப்புரையையொட்டி அவர் புரிந்த சட்டவாதமாகும். ஆயினும் வழக்கின் இடைநடுவே அவர் இருதய நோயால் பீடிக்கப்பட்டபோது, இராணி அப்புக்காத்து ரெங்கநாதன் அவருக்குப் பதிலாகத் தோற்றி அவ்வழக்கை வென்றார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

மாணவர் பகுதி கிறிஸ்தவம் A/L

# ஒத்தமை நற்செய்தி நூல்கள் 2

மூன்று நற்செய்தி நூல்களிலுமுள்ள ஒற்றுமைகளை தொடர்ந்து நோக்குவோம்.

★ தனிப்பகுதிகளின் ஒழுங்கு:- மேற் கூறப்பட்ட அமைப்பினுள்ளே இருக்கும் தனி நிகழ்ச்சிகள் கூட பெருமளவில் ஒரே ஒழுங்கில் வருகின்றன.

உதாரணமாக: மாற்கு 2:1-3:6 இல் வரும் ஐந்து தனி நிகழ்ச்சிகள் அதே ஒழுங்கில் மத்தேயுவிலும் (9:1–12:14), லூக்காவில் (5:17-6:11) வருகின்றன. அந்நிகழ்சிகளாவன;

- ☐ திமிர்வாதக்காரன்
- ☐ லேவி அழைக்கப்படல்
- ☐ உபவாசத்தைப் பற்றிய கேள்வி
- ☐ ஓய்வுநாளில் கதிர் கொய்தல்
- ☐ சூம்பின கையன்

(மத்தேயு, உபவாசம் பற்றிய கேள்விக்குப் பின் வேறு விடயத்தை சேர்த்தாலும், கடைசி இரண்டு நிகழ்வுகளையும் ஒழுங்கு தவறாமல் தருகிறார்.)

★ சொல் ஒற்றுமை:- பல தனிப்பகுதிகளில் மூன்று நூல்களும் ஒரே சொற்களையே பயன்படுத்துகின்றன. உதாரணமாக, வரி பற்றிய கேள்வியையும் (மத் 22:18-22= மாற் 12;13–17= லூக் 20:20-26) உபவாசத்தை பற்றிய கேள்வியையும் (மத் 9:14-17= மாற்2:18-22=லூக் 5:13-39) மூன்று நூல்களிலும் காணலாம். ஒவ்வொரு நற்செய்தி நூலும், நிகழ்ச்சியை கூறுவதில் மட்டுமல்ல, அதற்காக பயன்படுத்தும் சொற்கள் பெருமளவில் ஒற்றுமையாகவே உள்ளன. இதனை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.

இவ்வளவு நெருங்கிய பொருத்தம் இம் மூன்று நற்செய்தி நூல்களிலும் உண்டே! இவற்றை எழுதியவர்கள் தமக்குள் ஆலோசித்து அல்லது தம் பிரதிகளை பகிர்ந்து எழுதினரா? இவர்களுள் யார் முதலாவதாக எழுதினார்? இவர்களுக்கு ஏதேனும் பொதுவான மூலம் (Source) உண்டா? என்று கேள்விகள் எழுகின்றதல்லவா? இந்த சிக்கலைத்தான் ஒத்தமைவுப் பிரச்சனை (Synoptic Problem) எனப்படுகிறது.

(தொடரும்)

# பாதுகாக்கும் மரக்கொம்பு



குட்டிக் கதை

தென் அமெரிக்கக் காடுகளில் சில காலம் சுற்றித் திரிந்த திரு எட்வர்ட் என்பவர் தன் அனுபவங்களைக் கூறும் போது, தான் கண்கூடாகக் கண்ட ஒரு சம்பவத்தை பின் வருமாறு கூறினார்:-

ஒரு நாள் எட்வர்ட், காலையில் தன்னுடைய துப்பாக்கிகளையும் மதிய உணவையும் எடுத்துக் கொண்டு, காட்டில் வேட்டையாடப் புறப்பட்டார். பல மைல் தூரம் நடந்தபின் களைப்பினால், பட்டுப்போய் விழுந்து கிடந்த ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்தார்.

ஒரு குருவியின் சத்தம் அவருடைய கவனத்தை ஈர்த்தது உன்னிப்பாகக் கவனித்தார். ஒரு அடர்த்தியான கிளையின் மேல் ஒரு குருவி சுற்றிச் சுற்றிப் பறந்து அபாயக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தது. அங்கு அதன் கூடு இருந்தது.

இக் குருவி அபாயக் குரல் எழுப்புவதற்குக் காரணத்தைக் கண்டு பிடிக்க அவர் சுற்றுமுற்றும் கவனித்துப் பார்த்தார். அங்கு அதிக விஷமுள்ள ஒரு பெரிய பாம்பு தன் நாக்கை நீட்டிய வண்ணம் அம்மரத்துக்கு நேரே போவதைக் கண்டார். அப் பாம்பு குருவியின் கூட்டை நோக்கிப் போவதாகத் தெரிந்தது.

உடனே இந்தக் குருவி எங்கோ பறந்து போய் – சற்று நேரத்தில் தன் அலகில் ஒரு மரக்குச்சியை இலைகளுடன் கொண்டு வந்து தன் கூட்டின் மேல் மெதுவாக வைத்தது

அக் கூட்டினுள் தாய்க் குருவியும் அதன் குஞ்சுகளும் இருந்தன. அந்த இலைகள் கொண்ட அம்மரக் குச்சியை தன் கூட்டின்மேல் வைத்தபின் – தன் அபயக் குரலை நிறுத்திவிட்டு, அம்மரத்தின் உச்சிக் கொம்பு ஒன்றின்மேல் நின்று தன் கூட்டையும் அப்பாம்பையும் கவனித்துக் கொண்டிருந்தது.

பாம்பு மெதுவாக அம்மரத்திலேறி அக் கூட்டின் அருகில் வந்தவுடன், தன் தலையைத் தூக்கி கூட்டிற்குளிருக்கும் தாய்க் குருவியையும் குஞ்சுகளையும் கௌவப் போவதுபோல் தெரிந்தது-ஆனால், சடுதியில் திரும்பித் தான் வந்த வழியே. இறங்கி காட்டிற்குள் மறைந்து போனது.

(4ஆம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாணம்



வாலிபர் பகுதி:

# இளமைக் கோலங்கள்

## ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வோம்



ஓடும் ரயிலில் ஒரு பெட்டியில் ஒருவர் பயணம் செய்துகொண்டிருந்தார். அவருக்கு எதிரே ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார். அவர் ஓயாமல் புகைக்கும் குழலை (பைப்) வாயில் வைத்து புகைத்துக்கொண்டிருந்தார். இது அந்த அம்மையாருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. முகத்னத சுழித்தவாறு வெறுப்பை காட்டினார். அவ்வம்மையார். தன் சிறிய நாயை மடியில் வைத்து கொஞ்சி பேசிக்கொண்டு வந்தார். அது அந்த மனிதருக்கு பிடிக்கவில்லை. அவரும் அடிக்கடி முகத்தை சுழித்தார். சிறிது நேரம் கழிந்ததும், அந்தப் பெண் அவரிடம் மூர்க்கமாக பேச ஆரம்பித்துவிட்டார். 'புகை பிடிப்பவர்களை கண்டால் எனக்கு பிடிக்காது' என்று உரக்க கத்தினாள். அந்த மனிதர் 'நாய்குட்டிகளிடம் மனித உறவு கொண்டாடுகிறவர்களைக் கண்டால் எனக்கு அறவே பிடிக்காது' என்று சத்தமிட்டார். வாக்குவாதம் தொடர்ந்தது. இருவரும் எழுந்து நின்றுகொண்டு கைகளை வீசிச் சண்டையை தொடர்ந்த போது அந்த பெண் அவர் கையிலிருந்த பைப்பை பிடுங்கி, சன்னல் வழியே வெளியே எறிந்துவிட்டாள். அவர் உடனே அந்த பெண்ணின் கையிலிருந்த நாய்க்குட்டியை அவ்வாறே சன்னல் வழியாக எறிந்துவிட்டார். சண்டையை தொடர்ந்து இருவரும் இடையே சன்னல் வழியாக எட்டிப்பார்த்தபோது, அந்த நாய்க்குட்டி புகைக்குழலை வாயில் வைத்துக்கொண்டு ஓடும் ரயிலோடு போட்டி போட்டுக்கொண்டு ஓடி வந்தது!

நமக்கு பிடிக்காதவை மற்றவர்களுக்கும் பிடிக்ககூடாது. நான் சொல்லும் கருத்தே இறுதியானது. சரியானது என பலர் நினைக்கின்றனர். இதில் எந்தவிதமான நியாயமும் இல்லை, நமக்கு பிடித்தது, மற்றொருவருக்கு பிடிக்கவில்லை என்பதற்காக அவரை எதிரியாக கருதக்கூடாது. கருத்து வேறுபாடுகளை பொறுமையுடனும், அன்புடனும் செவிமடுப்போம். பல பல பெயர்களை தாங்கி பல்வேறு சபைகளாக, தமக்குள்ளே ஒருவரை ஒருவர் தாக்கி பேசி வருகிறது இன்றைய திருச்சபை. 'ஓர் உடல்' என கிறிஸ்தவ சபையை வர்ணிப்பதற்கும், இந்த தாக்குதல்களுக்கும் என்ன தொடர்புண்டோ...?!

இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லோருடனும் அமைதியுடன் வாழுங்கள் (ரோமர் 12:18) என பவுல் கூறுகிறார்.

தமிழ் மக்கள் தம் வரலாற்றில், சமாதானமின்மையால் ஏற்பட்ட வேதனைகளையும், மாறாவடுக்களையும் நன்கறிவர், இந்த வரலாற்றின் பழைய தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்வாதவர்கள்' மீண்டும் அதே தவறுகளை செய்யும்படி சபிக்கப்படுகின்றனர். அந்த நாய்க்குட்டி தன்னுடைய எஜமானியிடம் மட்டுமல்ல, அந்த மனிதரிடமும், ஏன் அவருடைய புகைக் குழலிடமும்கூட அன்பு காட்டிற்று.

அன்புள்ள வாலிப சகோதர, சகோதரிகளே!

இந்த 'இளமைக்கோலங்கள்' பகுதி உங்களுடையது. நீங்கள் உங்களையே புரிந்து கொள்ளவும், மற்றவர்களையும் புரிந்துகொண்டு வாழவும் உங்களை இது ஊக்குவிக்கும். இப்பகுதிக்கான ஆக்கங்கள், கருத்துக்கள், கேள்விகள் என்பனவற்றை எமக்கு எழுதியனுப்புங்கள்– நன்றி.

மீண்டும் சந்திக்கும் வரை,

யூட் அண்ணா


## அளவெட்டி சபை ஊழியனுக்கு வரவேற்பு

எமது பேராயர் பேரருள்மிகு அறிவர் எஸ். ஜெபநேசன் அவர்களால் உதவிக் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்ட அளவெட்டி சண்டிலிப்பாய் திருச்சபைகளின் ஊழியன் வண. ஏ. எஸ். ரி ஆனந்தனுக்கு அளவெட்டி திருச்சபையினர் அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு வரவேற்பு வைபவம் இளைப்பாறிய பேராயர் பேரருள்மிகு டாக்டர் டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஊழியனுடைய பணியைப் பாராட்டி சபையின் சார்பிலே திரு. எஸ். செல்வநாயகமும், வாலிபர் சார்பிலே திரு. எம். ரூபவதனனும் ஓய்வுநாட் பாடசாலையின் சார்பிலே ஆசிரியை எம். கிருபாகனியும் பேசினார்கள் பேராயர் தலைமையுரை நிகழ்த்தினார். காரியதரிசியினால் நன்றியுரை கூறப்பட்டு தேநீர் விருந்துபசாரத்துடன் வைபவம் நிறைவுபெற்றது.

# ஆண்டவரின் வருகை

## (வருகையின் ஞாயிறு 1.12.96)

இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து கடவுளினால் விடுதலை பண்ணப்பட்டு பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தில் ஓர் சுதந்திர மக்களாக வாழ்வார்கள் என்ற இறை வாக்குத்தத்தை நம்பி தங்கள் விடுதலைப் பயணத்தில் புறப்பட்டார்கள். அவ் விடுதலையின் பெறுபேறாக தாம் கடவுளின் மக்களாகவும், அவரின் உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்ட மக்களாகவும் வாழ்வார்கள் என்றும் எதிர்பார்த்தார்கள். கானான் தேசத்தைத் தம்வசம் ஆக்கியிருந்தும் தங்கள் சுதந்திரத்தை கடவுளின் மக்களாக அல்ல, மாறாக ஏனைய தேச மக்களைப் போலவே தங்கள் தேசியத்தைக் கணிக்கவும், உடன்படிக்கையைக் காப்பவர்களாக அல்ல, மாறாக அதைப் பல வகைகளில் மீறும் மக்களாகவுமே காணப்பட்டார்கள்



பாபிலோனியர், பாரசீகத்தியர், கிரேக்கர், ரோமர் வல்லரசுகளுக்கு முறையே ஒன்றன்பின் ஒன்றாக அடக்கி ஒடுக்கப்பட்டு, சுதந்தரத்தை இழந்தவர்களாய் துன்புற்றார்கள். எனினும் தாம் கடவுளின் வாக்குத்தத்தின் மக்கள், கடவுளின் உடன் படிக்கையின் மக்கள் என்பதை மறக்காமல், தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகளினால் இந் நம்பிக்கை உயிரூட்டப்பட்டு கடவுளே தங்கள் அரசனாக (மேசியாவாக) வருவார் அவரே தங்களை அடக்கி ஒடுக்குகிறவர்களிடமிருந்து விடுவித்து புது வாழ்வைக் கொடுப்பார் என்று ஆவலாய் எதிர் பார்த்தார்கள்.

கடவுள் வாக்குத்தத்தின் கடவுள், உடன் படிக்கையின் கடவுள், மக்களை விடுவிக்கும் கடவுள் என்பதே இஸ்ரயேலின் இறைநம்பிக்கையாய் தோற்றம் பெற்றது எனவே கடவுள் வரலாற்றின் கடவுள் வரலாற்றிற் கூடாக தனது நோக்கத்தை நிறைவேற்ற வல்லமையுள்ள கடவுள் என்றும்' வரலாறு கடவுளின் ஒழுங்குகள் நிறைவேற்றப்படும் அரங்கு என்றே புரிந்து கொண்டார்கள்.

இஸ்ரயேல் எந்த நதியைக் கடந்து முதல் முதல் கானானிற்குள் பிரவேசித்தார்களோ அதே யோர்தான் நதியின் கரையிலே யோவான் ஸ்நானன் கடவுளின் வாக்கைப் பெற்று வாக்குத்தத்தம் நிறைவேறும் செய்தியை மேசியாவின் (அரசனின்) வருகையின் செய்தியை இஸ்ரயேல் மக்களுக்குப் பறைசாற்றினார். அவரின் செய்தி ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தம் பண்ண அறைகூவும் செய்தியாயமைந்தது.

1. சிறையிருப்புக் காலத்தின் தீர்க்கதரிசியின் (ஏசா 40 – 41) வார்த்தைகளின் அடிப்படையில், பாலும் தேனும் ஓடும் நாடாக தங்கள் நாடுதோற்ற வேண்டுமெனில், மலைகள், குன்றுகள் மட்டப்படுத்தப்பட்டும் கரடுமுரடான நிலங்கள் சமதளமாக்கப்பட்டும், பள்ளங்கள், நிரப்பப்பட்டும், பாலை நிலம் பூத்துச் செழிக்கும் நிலமாக மாற்றப்படவேண்டும், கடவுளின் சுதந்திரத்தை சுதந்திர நிலத்திலேயே அனுபவிக்கலாம், மனிதன் தன் இயற்கைச் சூழ்நிலைக்குப் பொறுப்புள்ளவன், எனவே அப்பொறுப்பைக் கருத்துடன் ஏற்று எல்லா மக்களும் விடுதலை வாழ்க்கையை அதற்குகந்த சூழ் நிலையிலேயே வாழ வழிவகுக்க வேண்டும். ஆண்டவரின் வருகைக்கு, அவரின் ஆட்சியின் வருகைக்கு ஆயத்தம் பண்ணுவதின் ஓர் அம்சம், தனது சூழலை மனிதன் திருத்தியமைப்பதே. வாழ்வைப் பேணும் சூழலை உருவாக்க வேண்டும்.

2. ஆண்டவரின் வருகையை, அவரது ஆட்சியின் வருகையை வரவேற்பதாயின் சமூகத்தில் அவ்வாட்சிக்கு மாறான சக்திகளை அகற்றவேண்டும். அநீதிகள், உரிமைப் பறிப்புகள், சுரண்டிப் பிழைத்தல் போன்றவற்றை ஒழிக்க வேண்டும். யோவான் ஸ்நானன், ஆயக்காரர் அநியாயமாய் வரிவசூலிப்பதையும், படைவீரர் அச்சுறுத்திப் பணம் பறிப்பதையும் பொய் குற்றச்சாட்டுகள் சுமத்துவதையும், செல்வந்தர்களின் பேராசையையும் கண்டனம் செய்தார். மக்கள் சமூகத்தில் நிலவும் தீய சக்திகள் எவை என்பதை இனம் கண்டு அவற்றிற்கு விரோதமாகக் போராடுவதின் மூலமே ஆண்டவரின் வருகையை வரவேற்கக் கூடும்.

3. ஆண்டவரின் வருகைக்காக இவ்வண்ணம் ஆயத்தம் பண்ணி அவரின் ஆட்சியை வரவேற்க இப்படியான போராட்டத்தில் இறங்கும் நாம, இதைத் தொடக்குகிறவரும் முடிப்பவரும் நாம் அல்ல கிறிஸ்துவே என்பதை உணர வேண்டும். யோவான் ஸ்நானனும் இதைப் புரிந்து கொண்டார். எனவே அவர் தன்னைச் குறித்துச் சாட்சி பகராமல் தன்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார்

( 4ஆம் பக்கம் பார்க்க)

சிறு கதை

# அவன் ஒரு பாதிரி

''எவ்வளவு செல்லம் கொட்டி வளர்த்தன் அவனுக்காண்டி காசு காசாய் செலவழிச்சன் எல்லாம் மண்ணாய் போச்சு ... எல்லாம் மண்ணாய் போச்சு... '' ''என்னப்பாகத்திக்கொண்டு நிக்கிறியள்? எந்தநேரமும் உங்கடை தொணதொணப்புக்கு குறைவே இல்லை'' கணவனது சலிப்பான பேச்சைக் கேட்ட செல்லம்மா இவ்வாறு கூறுகிறாள். ''ஓ...உனக்கென்ன உழைச்சது நான்தானே'' ''இப்ப என்ன நடந்து போச்செண்டு கத்திறியள்?'' ''என்ன நடந்து போச்சோ? இனி என்ன நடக்க வேனும். உன்ரை மோன் ரவி பாதிரிக்கு படிக்கிறதுக்கு விண்ணப்பம் எல்லே குடுத்திருக்கானாம்'' ''என்ர மனம் குளிருதப்பா, கடவுளுக்கு சேவை செய்யுற தெண்டா... அதுவும் எங்கட பிள்ளை போதகராய் வாறதெண்டால்... நாங்கள் குடுத்து வச்சிருக்க வேணும். அந்த ஆவலை அவன்ர மனதிலை அனல் மூட்டி எழுப்பின கர்த்தரைத் துதிகாமல் அவனைப் பேசிக்கொண்டு நிற்கிறியள்'' தனது தாயினதும் தகப்பனதும் வாதாடல்களை கேட்ட ரவி அவ்விடத்துக்கு வருகிறான்.

''அப்பா... அம்மா... என்ன பெரிசா கதைச்சுக்கொண்டு நிற்கிறியள்? ஏதும் விசேடமான செய்தியே'' ரவி இந்தக்கேள்வியை கேட்ட மறு கணம் அவனது தகப்பனார் பஞ்சில் மூண்ட நெருப்பானார், ''என்னடா... ஏனடா.. உனக்கென்ன குறையெண்டு பாதிரிக்குப் படிக்க போகப் போகிறன் என்கிறாய்?'' ''ஒருகுறையுமில்லை எண்டபடியால் தானப்பா இவ்வளவு நிறைவாக எம்மைப்போஷித்து வழிநடத்துகிற கர்த்தருக்கு ஊழியம் செய்ய நான் போகப் போறேனப்பா'' நெஞ்சை நிமிர்த்தி பதில் கூறினான் ரவி. ''பாத்தியே அப்பா பாத்தியே... எனக்கே உபதேசம் செய்யுறான்...'' இது தகப்பன். ''அப்பா நான் உங்களுக்கு உபதேசம் செய்யேல்லை. நான் நம்பியிருக்கிற கர்த்தர் தனது அழைப்பை அடியேனுக்கும் ஈந்த அந்த உன்னதர் ஒரு நாள் உங்கட மனதை எப்படியும் மாற்றுவார். அப்ப .. அப்ப நான் கர்த்தருக்கு நன்றி சொல்வேன்'' என்றான் ரவி ''நானோ... உன்னையோ... பாதிரிக்கு படிப்பதை ஆதரிப்பதோ... ஒருகாலும் நடவாது'' முழு மறுப்பை பதிலாக அளிக்கிறார் தகப்பன் ரவி எதுவும் பேசாமல் கர்த்தரின் கரத்திலே யாவற்றையும் ஒப்படைத்த திருப்தியுள்ளவனாக அந்த இடத்தை விட்டு நகர்கிறான்.

அன்று திங்கட்கிழமை ரவியின் சபை போதகர் நற்செய்திக் கூட்டமொன்றை ஒழுங்கு பண்ணும் நோக்காய், கூட்ட அமைப்புபற்றி கதைக்கரவியிடம் அவன் வீட்டுக்கு வருகிறார். முன் திண்ணையில் ரவியின் தகப்பனே அமர்ந்திருக்கிறார். ''ஆர்? போதகரய்யாவே— என்ன விசயம்?'' கேள்வி ஒன்றைத் தொடுக்கிறார் ரவியின் தகப்பன். ''இல்லை ஐயா, ஒரு நற்செய்திக் கூட்டம் ஒழுங்கு படுத்த



யோசிக்கிலன். அது தான் அது பற்றி கதைக்க ரவியிட்ட வந்தனான்.'' போதகர் பதில் அளிக்கிறார். ''போதகரய்யா.. நான் சொல்லுறன் எண்டு கோபிக்காதேயுங்கோ... நீங்கள் தான் என்ர பெடியனைப் பழுதாக்கிப் போட்டுங்கள். அவன் என்னாவெண்டால் இப்ப சற்று சீற்றத்துடன் கூறுகிறார் தகப்பனார், ''ஐயா இது எவ்வளவு நல்ல விசயம் தெரீயுமே? இதற்குப் போய் ஏன் கவலைப் படுறியள்?'' ''நல்ல விசயமோ? அவனை ஒரு உயர்ந்த உத்தியோகத்துக்கெல்லோ இவ்வளவு காசைக் கொட்டிப் படிப்பிச்சனான்.''

''ஐயா... கடவுள் ஒரு மனிதனை என்ன வேலைக்கு அழைக்கிறாரோ அந்த அழைப்புக்கு மனிதன் கீழ்ப்படிய வேணும். கடவுள் சிலரை வைத்தியர்களாக, சிலரை ஆசிரியர்களாக என இப்படி பல்வேறு வேலைக்கு அழைக்கிறார். ஆனால் தான் தெரிந்துகொள்ளும் சிலரை தனது ஊழியத்துக்கு அழைக்கிறார். அப்படித்தான் உங்கட மகனை தன் ஊழியத்துக்கு அழைத்திருக்கிறார். தயவு செய்து அவருடைய அழைப்புக்குள் குறுக்கிடாதையுங்கோ...'' ''போதகரய்யா நீங்கள் என்னதான் சொன்னாலும் செவிடன் காதில் சங்கு தான். அதுவும் உந்த விசயத்திலை நான் மாறவே மாட்டன்'' ரவியின் தகப்பனோடு வாதம் புரிந்து பார்த்த போதகர், இந்த குறுக்கீட்டை ஜெபத்தின் வல்லமையால் மட்டுமே தடுக்கலாம் எனும் எண்ணத்தோடு அந்த இடத்தை விட்டு செல்கிறார்.

காலங்கள் மாறுகின்றன. ரவியின் கிராமத்தில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன ரவி ஊழியத்துக்கென பயிற்சி பெற்று அருகிலுள்ள கிராமத்தில் ஊழியஞ் செய்யப் புறப்பட்டுவிட்டான். இப்படி பல மாறுதல்கள். எனினும் ரவியின் தகப்பனது மனதிலே இன்னும் மாற்றமே இல்லை. தனது மகன் கர்த்தருடைய ஊழியக்காரனாக புறப்பட்டது அவரது மனதில் இன்னும் நெருஞ்சி முள்ளாக குத்திக் குறுகுறுத்துக் கொண்டே உள்ளது தனது மகனிடம் அவர் கொண்டிருந்த கோபம் இன்னும் மாறவில்லை.

அன்று திங்கட்கிழமை தனது அலுவலக விடயமாக அருகிலுள்ள கிராமத்துக்கு செல்கிறார் ரவியின் தகப்பன். அங்கு தான் அவரது மகன் போதகராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். ரவியின் ஆலய வீதியால் அவர் செல்ல வேண்டி இருந்தது. ரவியின் ஆலயத்தை எதேச்சையாக திரும்பிப் பார்த்தார் தகப்பனார். அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை அந்த ஆலயம் விசுவாசிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அவரது மகன் ரவி வல்லமையாக அருளுரை ஆற்றிக் கொண்டிருந்தார்.

தனது மகனை பார்த்து எத்தனையோ நாட்களான படியால் அவரை தந்தைபாசம் சும்மா விடவில்லை. எனினும் அவரது கௌரவம் ஆலயத்தின் உள்ளே செல்ல இடங்கொடுக்கவில்லை சனத்திரள் மத்தியில் ஒளிந்திருந்து மகனைப் பார்ப்பது எனும் முடிவுடன் ஆலயத்துள் நுழைகின்றார் தகப்பன். ரவி செய்த அருளுரை அவரது உள்ளத்தையும் சற்று நெருடியது. அதன் பின் அவர் செய்த பிரார்த்தனை அவரைக் கண்மூடச் செய்தது இறைபிரசன்னத்துள் வழி நடத்தியது. ஆலையத்தை விட்டு அவர் புறப்படும் போது தனது மனதின் எண்ணங்கள் சரியா எனும் கேள்வியுடனேயே சென்றார்.

தான் அந்த கிராமத்துக்கு வந்த அலுவலை முடித்துக் கொண்டு பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் வண்டிக்காக நின்றார் ரவியின் தகப்பனார். அவரது அருகில் நின்ற இருவர் தமக்குள் பேசிக்கொண்டது அவரது காதுகளையும் எட்டியது. ''டேய் குமார்! உன்ர அப்பா செத்தபிறகு நெடுகலும் எதையோ பறிகொடுத்த மாதிரி இருப்பாய், இப்ப என்னடாவெண்டால் பழைய குமார் மாதிரி பழைய முகக்களை... திடீரென்று உன்னால் எப்படி மாற முடிந்தது?'' ''ஓமடா சுகுமார் நான் ஒரு டொக்ரராயிருந்தபோதிலும் எனது மனதுக்கு நானே வைத்தியம் செய்ய இயலாமல் தவித்துக் கொண்டிருந்தேன் ஆனால் எங்கட சபைக்கு வந்த போதகர் கர்த்தருடைய செய்திகளை எனக்கு அனுதினமும் சொல்லி, என்னோடு சேர்ந்து செபித்து என்ர மனதை மாத்திப் போட்டார். இப்ப . நான் செய்கிற டொக்டர் வேலையையும் நான் கர்த்தருக்குள் அர்ப்பணிச்சு அவருக்காகத்தான் வேலை செய்யுறன்.''

இந்த உரையாடல் உண்மையிலேயே ரவியின் தகப்பனாரின் மனதில் இடம் பிடித்தது. தனது மகன் ஒரு டொக்டராக வரவேண்டும் என கனாகண்ட அவர், இப்போது அவன் ஒரு டொக்டருக்கு டொக்டராக பரம வைத்தியரான கர்த்தரின் துணைகொண்டு குமாரின் மனதை மாற்றிய ரவியின் ஊழியத்தின் வல்லமையைஉணர்ந்து கொண்டார்.

பி. தேவதாஸ்
இறுதி ஆண்டு
கிறிஸ்தவ இறையியல்கல்லூரி

இப்போது யார் வந்து ரவியின் தகப்பனாரிடம் ''உங்கள் மகன் என்ன செய்கிறான்?'' என்று கேட்டாலும், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவர் சொல்வதெல்லாம் இது தான்—

''அவன் ஒரு பாதிரி''

(யாவும் கற்பனை)

## ஆண்டவரின்......

என்றே கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி பகர்ந்தார். கிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால் உலகத்தின் தீய சக்திகளையும், உலக அரசுக்களையும் முறியடித்து நிலை நாட்டிய நீதியின் ஆட்சியே கடவுளின் ஆட்சி, நீதியின் விளைவாகத் தோன்றும் நீங்காத சமாதானத்தின் ஆட்சி. நான் உயர்த்தப்படும் பொழுது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன் என்றார் இயேசு. அப்படி சிலுவையில் உயர்த்தப்பட்ட பொருட்டே அவர் உலக மக்கள் அனைவரையும், பிளவுகளை ஒழித்து ஒப்புரவாக்கி, தன் ஆட்சிக்குள் சேர்த்துக் கொள்கிறார், எனவே, இன்று திருச்சபையும் யோவான் ஸ்நானன் உடன் சேர்ந்து இவ்வருகையின் காலத்தில் சிலுவையில் உயர்த்தப்பட்டு இறை ஆட்சியை உலகில் நிலை நாட்டிய கிறிஸ்துவுக்கு சாட்சிபகர அழைப்புப் பெறுகிறது:

D. J. A.

## வாசகர் கருத்து

கடந்த 15 நவம்பர் 96 அன்று ஒத்தமை நற்செய்தி எனும் தலைப்பில் வெளிவந்த ஆக்கம் மாணவராகிய எமக்கு மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருந்தது. தொடர்ந்து இவ்வாறான ஆக்கங்களை வெளியிட்டால் சிறப்பாக இருக்கும். பெண்கள் பகுதி மற்றும் சிறார்சோலை என்பன வரவேற்கத்தக்கவை.

''வெள்ளிதோறும் உதிக்கட்டும்–
தாரகை தவழட்டும் எம்மவர்
கரங்களில் இறைவன் வழி
நடத்தலுடன்''

அ. நிலானி – உடுவில்

வாசகர்கள் தொடர்ந்து தங்கள் கருத்துக்களை ''வாசகர் பகுதி'' என்ற பகுதிக்கு அனுப்பி வைக்கவும்.

(ஆ—ர்)

## விஷேட நாட்கள்

| | | |
|---|---|---|
| டிசம்பர் | 1- | வருகையின் ஞாயிறு |
| டிச. | 8. | திருமறை ஞாயிறு |
| டிச. | 15. | பிள்ளைகள் இல்லங்களின் இன்னிசை வழிபாடு |
| டிச. | 25 | கிறிஸ்மஸ் |
| டிச. | 31. | விழிப்பிரபு ஆராதனை |

## வாசகர்களுக்கு !

அன்பார்ந்த வாசகர்களுக்கு;

அச்சுயியந்திர கோளாறு காரணமாக 22.11.96 அன்று உதயதாரகையை வெளியிட முடியாது போய் விட்டது. இருவார இதழாக ஆறு பக்கங்களுடன் இம்முறை வெளிவருகிறது. அடுத்த வாரம் உதயதாரகை வெளிவராது. டிச. 13, டிசம்பர் 20 ஆகிய இருவாரங்களை உள்ளடக்கியதாக கிறிஸ்மஸ் புதுவருட சிறப்பிதழாக மலர்கிறது. சிறப்பிதழைச் சிறப்பிக்க எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களை எதிர் பார்க்கிறோம்.

(ஆ-ர்)

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி

# உதயதாரகை

ஆதீன காரியாலயம் Estd 1841 வட்டுக்கோட்டை

மலர்: 157 22 - 11 - 1996 இதழ்: 14

## இடம் பெயர்ந்த மக்கள்

சென்ற வருடம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் பின் வெளியேறிய யாழ்ப்பாண மாவட்ட மக்களில் பெரும்பாலானோரும், இவ் வருடம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் கிளிநொச்சி மாவட்ட மக்களும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் சொல்லனா வேதனைகளை அனுபவித்து வருகிறார்கள். வவுனியாவுக்கு சென்ற மக்களும், மீளவும் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்,

தொடக்கக் காலத்திலிருந்து அகதிகளும், இடம் பெயர்க்கப்பட்டவர்களும் நம் மத்தியில் இருந்து வருகின்றனர். கடவுளுடைய மக்கள் பலர் அகதிகளாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர் என்பதை வேதாகமத்தில் காண்கிறோம். இயேசுக்கிறிஸ்துவும் ஒரு அகதியாயிருந்தவரே. இத்துன்ப நிலையால் பாதிக்கப்படாத நாடுகள் ஒன்றுமே இல்லை எனலாம். இலங்கையில் எப்போ அமைதி ஏற்படும், எப்போது தம் சொந்த இடத்திற்கு திரும்பலாம் என ஆவலோடு எதிர்பார்த்து எம்மக்கள் பெரும் துன்பங்கள் மத்தியில் அகதிகளாய் வாழுகின்றனர்.

இலங்கையில் இனப்பிரச்சினையால் பலர் பலிகளாகி, தமது சொந்த நாட்டிலும் உலகம் முழுவதிலும் அகதிகளாய் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்கள் யாவரும் இராணுவ நடவடிக்கையாலும், மனித உரிமை மீறல்களாலும், ஆயுதப் போராட்டங்களாலும் அகதிகளாக்கப்பட்டவர்கள். அகதிகளாய் உள்ள யாவரும் கடவுளுடைய மக்களே, இவர்கள் யாவருக்கும் திருச்சபைகளில் உரிமை கோரும் பாக்கியதை உண்டு.

திருமறையில் இடம் பெயர்தவர்கள் பற்றி பல நிகழ்வுகள் காணப்படுகின்றன. ''யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால் அவனைச் சிறுமைப் படுத்த வேண்டாம். உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனை சுதேசிபோல் எண்ணி, நீங்கள் உங்களில் அன்பு கூருகிறது போல் அவனிலும் அன்பு கூருவீர்களாக. நீங்கள் எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்தீர்களே'' (லேவி 19:34-34) என கூறப்பட்டுள்ளது.

''......மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் (மத் 25 : 40)

இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் அகதி முகாம்களில் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள் இந்தியாவுக்கு செல்லும் மக்களும் கடற் பயணத்தில் சிலர் கைது செய்யப்படுவதும் அகதி முகாம்களில் கைதிகள் போல் அடைத்து வைக்கப்படுவதும் தினம் நடைபெறும் செயலாக கணப்படுகிறது.

இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் வன்னியிலும், மற்றும் இடங்களிலும் அவதியுறும் மக்களின் நிலையை விமரிசன உணர்வோடு திருச்சபைகள் குரல் கொடுக்க முன்வர வேண்டும். இலங்கையில் உள்ள திருச்சபைகள் ஒன்றிணைந்து மனித உரிமைகள், நீதி ஆகியவற்றை மனதிற்கொண்டு அகதிகளின் நிலைகளில் மாற்றங் கொண்டு வர பாடுபடல் வேண்டும். அத்துடன் இன்றைய அனைத்து திருச்சபைகளும் மனித நேய செயல்கள் மூலம் ஆயர்பணி அளிக்க முன்வருதல் தலையாய கடனாகும்.

# சிறார் சோலை



**அன்பான தம்பி தங்கைகளே!**

இவ்வாரச் சிந்தனைக்கு:-

மதிப்பவனை மிதிப்பவன் காட்டுமிராண்டி
மிதிப்பவனை மிதிப்பவன் வீரன்
மதிப்பவனை மதிப்பவன் மனிதன்
மிதிப்பவனையும் மதிப்பவன் புனிதன்.

மீண்டும் இந்த இதழில் உங்களைச் சந்தித்துக் கொள்வது பெரு மகிழ்ச்சி. இந்தப்பகுதி உங்கள் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும், உங்களுக்கு வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்தவுமே தொடங்கப்பட்டது. எனவே நீங்கள் உங்கள் சொந்த ஆக்கங்களையோ அல்லது எங்காவது படித்து சுவைத்த கதைகளை, நகைச்சுவைத் துணுக்குகளை, புதிர்களையோ, தாரகை அண்ணா சிறார் சோலை 'உதயதாரகை', ஆதீனகாரியாலயம், வட்டுக்கோட்டை''— என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அவை தரமானதாக இருப்பின் தாரகை அண்ணா மூலம் நிச்சயம் உதயதாரகையில் வெளிவரும்.

அன்பான தம்பி தங்கைகளே நாம் பலவேளைகளிலும் இறைவனிடம் எமக்கு இது வேண்டும், அது வேண்டும் என கேட்கிறோமல்லவா? எனினும், பல வேளைகளிலும் இது எமக்கு கிடைக்குமோ எனவே கேட்கிறோம். ஒரு அழகான கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு தேவாலயம். அந்த தேவாலயத்தில் நூறு அங்கத்தவர்கள். ஞாயிறு ஆராதனைகளும், ஏனைய செபக் கூட்டங்களும் சிறப்பாக நடை பெற்று வந்தது.

திடீரென அந்த கிராமம் மழை இன்மையால் பாதிக்கப்பட்டது. மழை இன்மையால் பயிர்கள் யாவும் வாடிப்போனது. கடும் வரட்சி நிலவியது. ஆகவே அந்த தேவாலயத்தில் பணிபுரிந்த குருவானவர் தனது சபை அங்கத்தவர்களை நோக்கி ''எமது கிராமத்தில் மழை பெய்ய வேண்டுமென யாவரும் உபவாசம் இருந்து செபிப்போம் வாருங்கள்'' என அழைப்பு விடுத்தார்.

அந்த உபவாசக் கூட்டத்திற்கு நூறு அங்கத்தவர்களும் வந்திருந்தார்கள். உபவாசக் கூட்டமென்பதால் உண்ணாமல், அருந்தாமல் கூடி வந்தார்கள். அவர்கள் செபம் பண்ணிக் கொண்டிருந்த போது மழை பெய்யத் தொடங்கியது. யாவரும் தமது செபத்தைக் கேட்டுத்தான் கடவுள் மழையைத் தந்தார் என குதூகலித்தனர் ஆனால் குருவானவரோ ''இங்கே இருக்கும் ஒருவரின் விசுவாசம் தான் மழையை தருவித்தது'' என்றார் யாவருக்கும் குருவானவர் மீது கோபம். ''உபவாசக் கூட்டம் என்பதால் உண்ணாமல், அருந்தாமல் வந்தோமே, குருவானவர் இப்படிக் கூறுகிறாரே'' என கவலையுற்றனர். ஆனால் குருவானவரோ ''அந்த விசுவாசியின் கரங்களைப் பாருங்கள் அவரது கரத்தில் குடை இருக்கிறது'' என்றார்.

பார்த்தீர்களா? யாவரும் ஏனோ தானோ எனும் எண்ணத்துடன் அக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மழையை இறைவன் தருவார் என உறுதியாக நம்பிய அந்த விசுவாசி பாராட்டத்தக்கவரல்லவா?

அவரைப்போலவே, எமது விசுவாசமும் சந்தேகமற்றதாக இருக்கவேண்டும். மனிதரால் இயலாத காரியம் யாவும் இறைவனால் கூடும் என திடமாக நாம் விசுவாசிக்க வேண்டும். இன்றே சந்தேகம் அறவே அற்ற விசுவாசிகளாக மாறுவோமா?

## சிறுவர் சிரிப்பு

(மரத்தோடு காரை மோதி, கார் விபத்தில் சிக்குண்ட ஒரு நோயாளி வைத்தியரிடம் சிகிச்சைக்கு வருகிறார்)

வைத்தியர்:- ''என்ன?—கார் ஓட்டுவதை கொஞ்சம் பார்த்து ஓட்டக்கூடாதா? இப்படி கண்டபடி போய் மோதுவதா?''

நோயாளி:- ''என் மேலை ஒரு தப்பும் இல்லை. நான் கார் கோர்ணை அடிக்கும்போது யாவரும் விலகிப் போனார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விற்பனவு விழா

நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தின் தாய்மார் / மாதர் சங்கத்தினரின் வருடாந்த விற்பனவு விழா 17-11-96 ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாண லூதர் டீன் அருட்திரு எஸ் பி. நேசகுமார் அடியார்கள் இதனை ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்.

ஏராளமானவர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு பொருட்களை அன்பளிப்பாக வழங்கியும், பொருட்களை வேண்டியும் விழாவைச் சிறப்பித்தனர்.

## ஈழத்தமிழர்-...

வடகிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் மரபுவழித்தாயகமாக இத் தீவின் பிரதமர் ஒருவர் ஏற்று அங்கீகரித்திருந்த முதல் ஒப்பந்த ஆவணமாகிய ''பண்டா செல்வா உடன்படிக்கையில்'' 1957 யூலை 26ம் திகதி நள்ளிரவு கைச்சாத்திட்டதும், தந்தை செல்வாவின் அல்பிரட் ஹவுஸ் வீதி இல்லத்துக்குத் திரும்பிய தமிழரசுத் தலைவர்களைக் கதவு துறந்து ஆங்கு வரவேற்றிருந்தார் அமரர் திருச்செல்வம் அந்தக்காட்சி ஒளிப்படமாக காலை ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையின் முதல் பக்கத்தில் இடம்பெற்றிருந்தது செய்தியுடன். அப் பத்திரிகை மறுநாள் அதன் ஆசிரியர் தலையங்கத்தில் நாட்டின் சொலிசிறறர் ஜெனரலுக்கு அந்த அர்த்த இராத்திரியில் தமிழரசுக் கட்சித் தலைவர் வீட்டில் என்ன வேலை? எனக்கேள்வி எழுப்பியிருந்தது இதன் நிமித்தம் திருச்செல்வம் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டார். அவரைப்பார்த்து ஓய்வுபெற்றதும் அரசியலுக்கு வந்தவர் என்று சிலர் தூற்றவும் செய்தார்கள்.

1976 நவம்பர் 26ல் தேசிய அரசுப் பேரவையில் அன்னாரின் மறைவு குறித்து தந்தை செல்வா ஆற்றிய இரங்கலுரையில் இருந்து சில வரிகள் வருமாறு:-

''......திரு திருச்செல்வம் சிறந்த சட்ட அறிஞர், அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார், நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பது அவரின் சிறப்பு இயல்பு, தனது நண்பர்கட்கும் தனது கட்சிக்கும், தனது மக்களுக்கும் நம்பிக்கையாக நடந்து கொண்டார்.

''...... திரு. திருச்செல்வம் இறந்தமையால் தமிழ் மக்கள் தங்களின் மிகப்பெரிய தவைர் ஒருவரை இழந்தனர்''

தொடரும்

## 157 வருடங்...

நல்ல தந்தையை இனங் கண்ட பிள்ளைகளாய், தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையே ஓர் நெருங்கிய குடும்ப உறவு இப்பத்திரிகையூடாக வளர்ந்தது. இவ் உறவு உலகளாவிய நிலையில் கூட பறந்து சென்றது.

1910 ஆம் ஆண்டு மக்களுக்கிடையில் ஒரே பரபரப்பு, பெரும் திகில், என்ன நடக்குமோ என்ற பலவாறான எண்ண ஓட்டங்கள் இதன் வால் முழு உலகையும் எரிக்கப் போகின்றது.

எனப் பல சிந்தனைகள் வால் வெள்ளியைப் பற்றி, மக்கள் மத்தியில் எழுந்தது.

இதனால் குழப்பமடைந்த மனநிலையில் இருந்தவர்களுக்கும், இதனைப்பற்றி தெளிவில்லாது இருந்தவர்க்கும், ஓர் பெரும் தெளிவினைக் கொடுத்தது. உதயதாரகை.

திறமையான அறிவுடைய சிறந்த ஞானியாக பேராசிரியர் Allen Abraham நேரத்திற்கு நேரம் இவ் வால்வெள்ளியின் நகர்வினை சரியாக கணக்கிட்டு உதயதாரகையூடாக வெளியிட்டதைப் படித்த, Londan இல் உள்ள Royal Astronomical Society, இவருடைய பெயரையே இவ்வால்வெள்ளிக்கு வைத்து. Hailey's Comet என்று அழைக்க வழி வகுத்தது.

ஜே கி. ஜீவானந்தினி

## சிறார் சோலை...

ஆனால் அந்த மரம் மட்டும் விலகாமல் நின்ற இடத்திலேயே நின்று விட்டது. மரத்தின் மேலை தான் தப்பு.''

வைத்தியர்:- ''? !? !''

✲ ✲ ✲ ✲ ✲ ✲

## இவ்வாரப் புதிர்

சென்றவாரப் புதிருக்கான விடை:— ''என் மகன் தண்ணீர் கொண்டுவருவதை என் கண்ணால் பார்க்க வேண்டும்.''

இவ்வாரப் புதிர்:- ஒரு அறையில் பத்து சாக்குகள் உண்டு. ஒவ்வொரு சாக்குகளிலும் சிறிய மாவுப் பொட்டலங்கள் உண்டு. அவற்றில் ஒன்பது சாக்குகளில் ஒரு கிலோ மாவுப் பொர்ட்டலங்களும், ஒரு சாக்கில் மட்டும் ஒரு கிலோவும் நூறுகிராமுமான மாவுப்பொட்டலமும் உண்டு நிறை கூடிய மாவுப் பொட்டலங்கள் உள்ள சாக்கு எது என்பதை கண்டு பிடிக்கவேண்டும். ஆனால் ஒரு முறை மட்டுமே நிறுக்க வேண்டும் அது எவ்வாறு?

இப்புதிருக்கான விடை அடுத்த இதழில் வெளிவரும். புதிருக்கான விடையை நீங்களும் எழுதி அனுப்புங்கள். சரி தம்பி தங்கைகளே! மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை வணக்கம் கூறி விடை பெறுவது:-

என்றென்றும் அன்புடன்
**தாரகை அண்ணா**

# கடந்து வந்த பாதையிலே ......

## இந்திய-இலங்கை உடன் படிக்கை - 1987

1. 1. இலங்கையின் ஐக்கியம் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக் காக்க விரும்பி

1. 2. இலங்கை சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் (சோனகர்கள்), பறங்கியர்கள் ஆகியோரைக் கொண்ட பல்லின பல மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து

1 3 மிகக் கவனமாக பேணிக் காப்பாற்ற வேண்டிய தனித்தனிக் கலாச்சாரம், மொழி தனித்துவத்தை ஒவ்வொரு இனமும் கொண்டுள்ளதென்பதையும்

1. 4. வடக்கு கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக் குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப் பூர்வமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கீகரித்து.

1. 5 இலங்கையின் ஐக்கியம் பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றிற்குப் பங்களிப்புச் செய்யும் அம்சங்களைப் பலப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து சகல பிரஜைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும், ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றி வாழும் பல இன பலமொழி பேசும் பல மதங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையைப் பேணி

(2) தீர்மானிக்கப்படுகிறது என்னவென்றால்

தொடரும்

## இறப்புச் செய்தி

உடுவில் திருச்சபையைச் சேர்ந்த ஜேக்கப் ஆசீர்வாதம் 10-11-96 அன்று தவறுதலாக கிணற்றில் மூழ்கி மரணமானார். 11-11-96 அன்று இறுதி ஆராதனை சபை ஊழியன் வண. V. இராஜ்குமார் அவர்களால் நடாத்தப்பட்டது.

## வாசகர்களுக்கு!

உதயதாரகைக்கு அனுப்பும் கட்டுரைகள், கவிதைகள், செய்திகள் முதலியனவற்றை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சிறுவர் பகுதி, வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி, என்பனவற்றுக்கான ஆக்கங்களையும் உங்களிடமிருந்து எதிர் பார்க்கின்றோம்.

உதயதாரகை ஆக்கங்கள் பற்றிய எண்ணக்குவியல்களையும் அனுப்பிவைக்கவும்.

'ஆசிரியர்',
உதயதாரகை
ஆதீனக் காரியாலயம்
வட்டுக்கோட்டை.

## இறையியல்:....

இறையியல் கல்லூரிக்கு சென்று நூல்களை எடுத்து வந்தனர். இந் நூல்களை ஒழுங்குபடுத்துவதில் இறையியல் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து யாழ். கல்லூரி மாணவர்களும் உதவி புரிந்தனர். எமது மருதனார்மட இறையியல் கல்லூரி சட்டடம் மிக விரைவில் மீளவும் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## இறையியல் கல்லூரி மாணவர்கள் வருகை

வட்டுக்கோட்டையில் மீள ஆரம்பித்து சிறப்பாக நடைபெற்று வருகிற இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு அதன் இறுதி ஆண்டு மாணவர்களான சகோதரன் எஸ். குகனேஸ்வரன், சகோதரி ஏ. டெய்சி, மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்காளான சகோதரன் ரி. டானியல், சகோதரன் எஸ். ஜோசுவா, மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவனான சகோதரன் எஸ் அசரையா, மற்றும் முதலாம் ஆண்டு மாணவனான சகோதரன் எஸ். டானியல் ஆகியோரும் திரும்பி வந்து சேர்ந்துள்ளனர். புதிய விரிவுரையாளரான சகோதரன் ஈனோக் புனிதராஜா அவர்களும் வந்து சேர்ந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாது காக்கும் ...

இதைக் கவனித்துக் கொண்டிருந்த எட்வர்ட், மரத்தின் மேல் ஏறி, அக்குருவிக் கூட்டின் மேல் வைக்கப்பட்ட அந்தக் குச்சியையும் இலைகளையும் கொண்டு வந்து, அங்கிருந்த ஒரு காட்டு வாசியிடம் காண்பித்தான். அவன் அதைப் பார்த்தவுடன், இது பாம்புகளுக்கு விஷமுள்ள ஒரு செடி - பாம்பு விரட்டி என்றும், தான் இதுவரை இச் செடியின் இலைகளைத் தொட்டதில்லை என்றும் கூறினான்,

அச்சிறு குருவி தன் எதிரியிடமிருந்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற இம் மரக்குச்சியைப் பாவித்தது. இச் சிறு குருவிக்கு இறைவன் அளித்த ஞானம் பெரிது!

''மண்ணுலகின் அனைத்து எல்லை நாட்டோரே!
என்னிடம் திரும்பி வாருங்கள்
விடுதலை பெறுங்கள்;
ஏனெனில் நானே இறைவன்;
என்னையன்றி வேறு எவரு மில்லை''
(ஏசா. 45 : 22)

D. R. A.

## அழுது...

தில் புகுத்த வேண்டும். அது சற்றேனும் அவர்களது துயரத்தை போக்கி விடும்போல் திலிக் எனும் அறிஞர் நமது அனுபவத்துக்கும் வேதத்துக்கும் உள்ள தொடர்பு என்ன? என காண்பதே ''இறையியல்'' என்கிறார். இன்று பத்திரிகை வானொலி, தொலைக் காட்சியை பார்த்தால் கொலைகள், வன்முறைகள் மலிந்து இருக்கிறது. இங்கு மட்டுமல்ல எங்குமே வன்முறைகள் இடம்பெற்றுக் கொண்டே இருக்கிறது. எனவே ''என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவைகளையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே'' என மத்தேயு 5:11இல் ''இயேசு சொல்வதை புரிந்து கொண்டு இன்றைய சூழலுக்கேற்ற இறையியலை ஆக்குவதில் நாம் யாவரும் முன் நின்று உழைப்போமாக'' என கூறினார்.

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீன காரியாலயத்தில் உள்ள அமெரிக்க இலங்கை மிஷன அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர், G. நடராஜாவினால் 1996 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.